# தமிழ்நாடு  ஊழல் ஒழிப்பு ஆணையம் (Lokayukta)
# சட்ட முன்வரைவு

**அத்தியாயம் - 1**

**பிரிவு 1 - தலைப்பு மற்றும் முன்னுரை**

(1) இந்தச் சட்டம் “ஊழல் ஒழிப்பு ஆணையச் சட்டம் 2016” என்று அழைக்கப்படும்.

(2) இச்சட்டம் தாக்கல் செய்யப்பட்டு மூன்று மாதங்களில் அமலுக்கு வரும்.

(3) இச்சட்டம் தமிழகம் முழுவதிலும் அமல் செய்யப்படும்.

**பிரிவு 2 - விளக்கங்கள்**

2.1 - **ஊழல் மற்றும் சேவை மறுப்புக்கான விளக்கங்கள்**

“ஊழல் செயல்” என்பதன் பொருள் :-

(i) 1988-ம் வருட ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க அனைத்துச் செயல்களும்; இவற்றில் மக்கள் பிரதிநிதிகளாக தமிழக சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் அடங்குவர் (இந்திய அரசியல் சட்டம் 194 ஷரத்திற்கு உட்பட்டு)

(ii) தெரிந்தே சட்டத்திற்கோ விதிமுறைகளுக்கோ புறம்பாக  ஒரு பொது ஊழியர் எந்த மனிதருக்கும் தேவையற்ற ஆதாயம் கொடுத்தல்; மற்றும் ஒரு பொது ஊழியர் எந்த மனிதரிடம் இருந்தும் தேவையற்ற ஆதாயம் பெறுதல்.

**சேவை மறுப்பு என்பதன் பொருள்**

(i) தமிழ் நாடு அரசு, அரசு அலுவலகங்களால் கொடுக்கப் பெறும் அனைத்து சேவைகளுக்கும் கால அவகாசங்கள் நிர்ணயித்து, அவற்றிற்குப் பொறுப்பான அரசு அலுவலர் ஆகியோரை இந்தச் சட்டம் அமலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் வெளியிட வேண்டும்.

(ii) அரசு சேவைகள், அவற்றின் கால அவகாசம், அவற்றிற்குப் பொறுப்பான  அரசு அலுவலர் ஆகியோர் கொண்ட பட்டியல் அரசு இணைய தளத்தில் நிரந்தரமாக வெளியிடப்பட வேண்டும்.

(iii) ஒவ்வொரு அரசு அலுவலகமும் தமது அலுவலகத்தின் சேவைகள், அவற்றின் கால அவகாசம், அவற்றிற்குப் பொறுப்பான  அரசு அலுவலர் ஆகிய தகவல்களை தமது அலுவலகத்தில் பொது மக்கள் பார்வையில் படும்படி வெளியிடப்பட வேண்டும்  இத்தகவல்கள் அத்துறைக்கான இணைய

தளத்திலும் வெளியிடப்பட வேண்டும். இது மக்கள் உரிமை சாசனம் என்று அழைக்கப்படும்.

(iv) குறித்த கால அவகாசத்தில் மேற்கண்ட சேவைகள் நிறைவேற்றப்படாததைப் பற்றிய புகார் "சேவை மறுப்பு" என்று அழைக்கப்படும்.

**2.2 - பிற விளக்கங்கள்**

(1) "அரசு" என்பதற்கு இந்தச் சட்டத்தில் தமிழ்நாடு அரசு என்று பொருள்

(2) "அரசு அலுவலர்" என்பதற்கு தமிழக அரசு வேலைகளில் ஈடுபட்டுள்ள அரசு ஊழியர் என்று பொருள். இதனுள் தற்காலிகமாக இந்திய மத்திய அரசு அல்லது மற்றொரு மாநில அரசு அல்லது பிற அமைப்புக்களின் கீழிருந்து தமிழக அரசின் அலுவல்களில் அமர்த்தப்பட்டுள்ள ஊழியரும் இதில் அடங்குவார்.

(3) "பொதுத் துறை" என்பது

- அரசியல் சட்டத்தின் கீழ் அல்லது அரசியல் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது
- மாநில சட்ட சபையின் கீழ் அல்லது மாநில சட்டச்சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது
- அரசினால் குறிப்பின் அல்லது அரசாணையினால் உருவாக்கப்பட்ட

அனைத்துத் துறைகளையும் குறிக்கும். இதில் அரசினால் பெருமளவில் நிதி வழங்கப்படும்; அல்லது அரசினால் நிர்வகிக்கப்படும்; அலல்து அரசினால் பொறுப்பேற்கப்படும் அனைத்துத் துறைகளும் அடங்கும்.

(4) "பொது ஊழியர்" என்னும் பதம் அரசு அலுவலராக இருந்தவர் அல்லது இருப்பவர் என்று பொருள்படும் (ஊழல் தடுப்புச் சட்டம், 1988, பிரிவு 2(c)-ன் கீழ் வரும் விளக்கத்தின் அடிப்படையில்). தமிழ் நாட்டின் முதலமைச்சர், அமைச்சரவையில் உள்ள அனைத்து அமைச்சர்கள் மற்று சட்ட சபை உறுப்பினர்கள் அனைவரும் பொது ஊழியர்களில் அடங்குவர். மேலும் சென்னை உயர் நீதி மன்றத்தைச் சேர்ந்த நீதிபதிகள் இந்தச் சட்டத்தின் கீழ் பொது ஊழியர்களாகக் கருதப்பட மாட்டார்கள்.

**பிரிவு 3 - தமிழ்நாடு ஊழல் கண்காணிப்பு மற்றும் தடுப்புத் துறை ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் கீழ் வருதல்**

இந்தச் சட்டத்தின்படி, ஊழல் கண்காணிப்பு மற்றும் தடுப்புத் துறை, தன்னுடைய அலுவலர்கள் மற்றும் பணிகள் அனைத்துடனும் ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் கீழ்

கொண்டு வரப்படும். ஊழல் கண்காணிப்பு மற்றும் தடுப்புத் துறையின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் ஊழல் தடுப்பு ஆணையரின் கீழ் பணி புரிவார். ஊழல் கண்காணிப்பு மற்றும் தடுப்புத் துறையின் நிர்வாக விடயங்கள் யாவும் ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் கீழ் கொண்டு வரப்பட்டும்.

## அத்தியாயம் 2 - ஊழல் ஒழிப்பு ஆணையம் உருவாக்கம்

### பிரிவு 4 - ஊழல் ஒழிப்பு ஆணையர், இணை ஊழல் ஒழிப்பு ஆணையர்கள் மற்றும் உறுப்பினர்களின் பணியமர்த்தல்

(1) ஊழல் ஒழிப்பு ஆணையக் குழு, ஒரு தலைவர் (ஊழல் ஒழிப்பு ஆணையர்), இரு இணை ஊழல் ஒழிப்பு ஆணையர்கள், மற்றும் இரு உறுப்பினர்களால் அமைந்திருக்க வேண்டும்.

(2) ஊழல் ஒழிப்பு ஆணையர், தமிழ்நாடு ஆளுனரால், தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்படுவார்.

(3) இரு இணை ஊழல் ஒழிப்பு ஆணையர்கள் மற்றும் இரு உறுப்பினர்கள் தமிழ்நாடு ஆளுனரால், ஊழல் ஒழிப்பு ஆணையரின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்படுவார்கள்.

(4) ஊழல் ஒழிப்பு ஆணையராக நியமிக்கப் படுபவர் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாகவோ அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதியாகவோ பதவி வகித்திருக்க வேண்டும்.

(5) இணை ஊழல் ஒழிப்பு ஆணையராக நியமிக்கப்படுபவர் மாவட்ட நீதிபதி மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி வகித்தவராகவோ அல்லது ஓய்வு பெற்ற குடியியல் பணி வகித்தவராகவோ (இப்பணிகளில் குறைந்தது 15 வருட அனுபவத்துடன்) இருந்திட வேண்டும்.

(6) உறுப்பினராக நியமிக்கப்படுபவர் மாவட்ட நீதிபதி மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி வகித்தவராகவோ அல்லது ஓய்வு பெற்ற குடியியல் பணி வகித்தவராகவோ (இப்பணிகளில் குறைந்தது 10 வருட அனுபவத்துடன்) இருந்திட வேண்டும்.

(7) ஒவ்வொரு மாவட்டத்திலும் சேவை உரிமை பெற முதலாவது மேல்முறையீட்டு அலுவலராக ஒரு சேவை உரிமை அலுவலர், ஊழல் ஒழிப்பு ஆணையரால் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(8) கீழ்க்கண்டவர்கள் ஊழல் ஒழிப்பு ஆணையராகவோ,இணை ஊழல் ஒழிப்பு ஆணையராகவோ அல்லது ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் உறுப்பினர்களாகவோ நியமிக்கப்பட தகுதியற்றவர்கள்:

(அ) இந்தியக் குடிமகன் அல்லாதவர்

(ஆ) ஒழுக்க குறைபாட்டிற்காக ஏதாவது நீதிமன்றத்தில் என்றாவது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பெற்றவர்

(இ) நாற்பத்தி ஐந்து வயதிற்குக் குறைவானவர்

(ஈ) ஓய்வு பெற்று அல்லது ராஜினாமா செய்து (தேர்வுக் குழு கூடும் நாளில் இருந்து) முந்தைய இரண்டு வருடங்களில் தமது அரசுப் பணியில் இருந்து வெளி வந்தவர்.

(9) ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சிறந்த ஒழுக்கம் கொண்டவராகவும் பணியில் திறமை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். அதோடு இவ்வாணையக் குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் சட்டப் பின்புலம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்

**சட்டப் பின்புலம் - விளக்கம்:** உச்ச நீதிமன்ற நீதிபதிகள் , உயர் நீதி மன்ற தலைமை நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள்; மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோர் சட்டப் பின்புலம் கொண்டவர்களாக இந்தப் பிரிவின் கீழ் கருதப்படுவார்கள்.

**பிரிவு 5 - ஊழல் ஒழிப்பு ஆணையர் தேர்வுக் குழு**

1. தேர்வுக்குழு கீழ்கண்ட ஐவர் கொண்டதாகும்:

(a). தமிழ்நாடு முதலமைச்சர்

(b) சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவர்

(c) உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி

(d) உயர் நீதிமன்ற நீதிபதிகள் மன்றத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட இரு நீதிபதிகள்.

2. உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தேர்வுக் குழுவின் சந்திப்பை நடத்துவார்.

3. ஊழல் ஒழிப்பு ஆணையர் பதவிக்கு மூன்று நபர்களை இத்தேர்வுக்குழு பல தரப்புக்களில் இருந்து வரும் தகவல்களை வைத்து (ஒருமித்த கருத்தாக இருந்தால் நலம்) தயார் செய்யும்.

4. இவ்வாறு தேர்வுக்கு கருதப்படும் நபர்களில் எவராவது ஒருவர் மேல் தேர்வுக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தால் அந்த நபர் மேலே உள்ள மூன்று நபர் பட்டியலில் இடம் பெறத் தகுதி பெற்றவராக மாட்டார்.

5. தேர்வுக் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் முடிவில் ஒரு நபர் பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

6. தேர்வுக்குழு, இவ்வாறு ஊழல் ஒழிப்பு ஆணையராக பரிந்துரை செய்யப்படும் நபரை, முடிவெடுத்த பின், அந்த நபரின் முழு சம்மதத்தை பெற்ற பிறகே, தமிழக ஆளுநரிடம் அந்நபரை பரிந்துரை செய்யலாம்.

7. ஊழல் ஒழிப்பு ஆணையர்/இணை ஊழல் ஒழிப்பு ஆணையர்/ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் அப்பொறுப்பில் இருந்து ஓய்வு பெறுவதற்கு 3 மாதங்கள் முன்பு அந்தப் பொறுப்புக்கு மாற்று அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். எதிர்பாராத காரணங்களால் இந்தப் பதவிகள் ஆளற்றுப் போனால் 3 மாதங்களுக்குள் அவை நிரப்பப்பட வேண்டும்.

8. இந்தச் சட்டம் அமலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் ஊழல் ஒழிப்பு ஆணையர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

9. இவ்வாறு தேர்வுக்குழு, ஊழல் ஒழிப்பு ஆணையர் பதவிக்குப் பரிந்துரை செய்யாமல் இருந்தால், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தற்காலிகமாக இப்பதவிக்கு ஒரு தகுதியான நபரை, இந்தச் சட்டத்திற்கு உட்பட்டுப் பரிந்துரை செய்ய வேண்டும். இத்தற்காலிக ஊழல் ஒழிப்பு ஆணையர் பிரிவு 5.5-ன் கீழ் ஊழல் ஒழிப்பு ஆணையர் நியமிக்கப்படும் வரை பதவியில் இருப்பார்.

10. ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்கள் எவரும் பாராளுமன்றம் மற்றும் எந்த மாநில சட்டசபையிலும் உறுப்பினராக இருக்கக் கூடாது. மேலும் லாப நோக்கில் உள்ள எந்தப் பதவியிலும் இருக்கக் கூடாது. எந்த ஒரு அரசியல் கட்சி உறுப்பினராகவும் இருக்கக் கூடாது. எந்த ஒரு வியாபாரமோ அல்லது தொழிலோ செய்யக் கூடாது. எனவே, இந்தக் குழுவில் நியமனம் செய்யப்படும் நபர் -

- லாப நோக்கில் ஏதாவது பதவியில் இருந்தால் அதை ராஜினாமா செய்தல் வேண்டும்.
- வியாபார நோக்கில் உள்ள ஏதாவது நிறுவனத்தில் இருந்தாலோ அல்லது அத்தகைய நிறுவனத்தில் தொடர்பு பெற்றிருந்தாலோ தொடர்பை அல்லது பதவியை துறக்க வேண்டும்.
- ஏதாவது தொழிலில் இருந்தால் அத்தொழிலில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளல் வேண்டும்.
- ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் பொறுப்புக்களுடன் முரண்படும் ஏதாவது தொழில் அல்லது வேலையில் இருந்தால் அந்தத் தொடர்பை துண்டிக்க வேண்டும்.

இவ்வாறு தொடர்பைத் துண்டித்த பின்னும் அந்த அலுவலரின் முந்தைய தொடர்பு, ஊழல் ஒழிப்பு ஆணையத்தில் அவருடைய பணிக்குப் பாதிப்பை அளிக்கும் பட்சத்தில் அந்நபர் தேர்வுக்குழுவால் ஊழல் ஒழிப்பு ஆணையர் பதவிக்குக் கருதப்பட மாட்டார்.

**பிரிவு 6 - ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் உறுப்பினர்களின் பதவிக் காலம்**

(1) ஊழல் ஒழிப்பு ஆணையராக நியமனம் செய்யப்படும் நபர் அந்தப் பொறுப்பை பதவியேற்ற நாளில் இருந்து ஐந்து வருடங்கள் வரை வகிக்க வேண்டும்; அல்லது 75 வயது அடையும் வரை வகிக்க வேண்டும் (இவை இரண்டில் எது முந்தையதோ அது வரை).

(அ) ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்கள் தம்முடைய கைப்பட ஆளுநருக்கு எழுதி (இந்தச் சட்டத்தில் குறிப்பிட்டபடி) தம் பொறுப்பை ராஜினாமா செய்யலாம்.

(ஆ) ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்கள் தம்முடைய பதவியில் இருந்து இச்சட்டத்தில் குறிப்பிட்டபடி நீக்கப்படலாம்.

(2) ஊழல் ஒழிப்பு ஆணையர் பதவி எந்தக் காரணத்திற்காகவாவது (மரணம், ராஜினாமா மற்றும் இதர காரணங்கள்) காலியாகும் நிலை வந்தால், ஆளுநர், அரசுக் குறிப்பின் மூலமாக ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் மூத்த உறுப்பினரை (மற்றொரு ஊழல் ஒழிப்பு ஆணையர் நியமனம் செய்யப்படும் வரை) ஊழல் ஒழிப்பு ஆணையராக நியமனம் செய்யலாம்.

(3) ஊழல் ஒழிப்பு ஆணையர் பணி விடுப்பில் இருந்தாலோ, அல்லது பிற காரணங்களினால் தம் பணிகளை நிறைவேற்ற முடியாமல் இருந்தால், ஆளுநர், அரசுக் குறிப்பின் மூலமாக மூத்த இணை ஊழல் ஒழிப்பு ஆணையரை அப்பணிகளை நிறைவேற்ற அதிகாரம் கொடுக்கலாம் (ஊழல் ஒழிப்பு ஆணையர் மீண்டும் பணிக்குத் திரும்பும் வரை).

(4) ஊழல் ஒழிப்பு ஆணையர் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்களுக்கு உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதி ஆகியவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் மற்றும் படி ஆகியவை முறையே தரப்பட வேண்டும்.

ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்கள், தம் நியமனத்தின் போது ஓய்வூதியம் (இதில் உடல் நலக் குறைவுக்கான ஓய்வூதியம் அடங்காது) இந்திய அரசின் வாயிலாகவோ, அல்லது ஏதாவது ஒரு மாநில அரசின் வாயிலாகவோ பெற்று

வந்தால் அவர்களுடைய ஊழல் ஒழிப்பு ஆணையப் பணிக்கான ஊதியம் கீழ்கண்ட அளவுப்படி குறைக்கப்படலாம்.

(அ) அந்த ஓய்வூதியத்தின் அளவுப்படி; அல்லது

(ஆ) நியமனத்திற்கு முன்னால் அவர் தம்முடைய ஓய்வூதியத்தின் ஒரு பங்கைப் பெற்றிருந்தால், அந்த அளவுப்படி அவருடைய ஊழல் ஒழிப்பு ஆணையத்திற்கான ஊதியத்தைக் குறைக்கலாம்.

(5) ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தின் அளவு மற்றும் பிற பணிக்கான நிபந்தனைகள் அரசின் முடிவின்படி எடுக்கப்படலாம்.

(ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தின் அளவு மற்றும் பிற பணிக்கான நிபந்தனைகள் அவர்களுடைய நியமனத்திற்குப் பிறகு அவர்களைப் பாதிக்குமாறு மாறாமல் இருத்தல் வேண்டும்).

(6) ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்கள் தம் பொறுப்பில் இருந்து வெளிவந்த பின்னர் இந்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் இவ்வரசுகளின் நிதி கொண்டு இயங்கும் எந்த ஒரு அமைப்பு ஆகியவற்றில் எந்த ஒரு பதவிக்கும் நியமனம் செய்யப்படத் தகுதியாக மாட்டார்கள். அதோடு, இவ்வுறுப்பினர்கள் பாராளுமன்ற, மாநில சட்ட சபைகள் மற்றும் பிற பொது அமைப்புக்களின் எந்த ஒரு தேர்தலிலும் போட்டியிடுதல் இச்சட்டப்படி தவறாகும்.

**பிரிவு 7 - ஊழல் ஒழிப்பு ஆணையரின் பதவி நீக்கம்**

1. ஊழல் ஒழிப்பு ஆணையர் பதவி நீக்கம் கீழ்க்கண்ட முறையில் மட்டுமே செய்யலாகும்:

ஊழல் ஒழிப்பு ஆணையரைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானம், மாநில சட்டசபையில் அந்தச் சபையின் மொத்த உறுப்பினரில் பெரும்பான்மையும், அவைக்கூட்டத்தில் வாக்களிப்பின் சமயம் இருக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களும் ஆதரவு தெரிவிக்கும் வகையில் நிறைவேற்றப் பட்டு, அந்த வாக்களிப்பின் முடிவு அந்த அவைக்கூட்டத்தொடரின் போதே ஆளுநரிடம் வழங்கப்பட்டால், ஆளுநர் தம்முடைய ஆணையின் மூலமாக மட்டுமே பதவி நீக்கம் செய்ய இயலும். இந்தப் பதவி நீக்கம் நிரூப்பிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது பணியைச் சரியாக நிறைவேற்றாத அல்லது நிறைவேற்ற முடியாத காரணங்களினால் மட்டுமே நடைபெற வேண்டும்.

(2) ஊழல் ஒழிப்பு ஆணையரின் பதவிநீக்கத்திற்கான அறிவிப்பு தீர்மானம் எழுத்துபூர்வமாக தமிழ்நாடு சட்டசபையின் சபாநாயகருக்கு அச்சட்டச்சபையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கொடுக்கலாம்.

(3) இவ்வாறு மேலுள்ள இணைப் பிரிவு (2)ன் கீழ் தரப்படும் அறிவிப்புத் தீர்மானம் கிடைத்தவுடன் சபாநாயகர், தகுதியானவர்களுடன் கலந்தாலோசித்து தேவையான ஆவணங்களையும் பரிசோதித்து, இப்பதவிநீக்கத் தீர்மானத்திற்கு முகாந்திரம் உண்டு என்று உறுதியான பின்னர் தீர்மானத்தை அனுமதிக்கலாம்; அல்லது முகாந்திரம் இல்லையென்று முடிவெடுத்தால் தீர்மானத்தை அவை முன் கொண்டு வர அனுமதி மறுக்கலாம்.

(4) இவ்வாறு இணைப் பிரிவு (2)-ல் உள்ளபடி அறிவிப்புத் தீர்மானம் அனுமதிக்கப் பெற்றால், சபாநாயகர் தீர்மானத்தை நிலுவையில் வைத்து, இந்தப் பதவி நீக்கத்திற்கான விசாரணையை மேற்கொள்ள தமிழ்நாடு உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை பணிக்கலாம்.

இவ்வாறான விசாரணைக்காக தலைமை நீதிபதியை கேட்டுக் கொள்ளுதல், சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே நடக்கலாகும்.

(5) இவ்வாறு விசாரணை மேற்கொள்ளப்படும் பொழுது உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மூன்று நபர் கொண்ட நீதிபதிகள் .குழுவை விசாரணைக்குப் பொறுப்பாக நியமனம் செய்தல் வேண்டும். இக்குழுவால் விசாரணைக்கு அடிப்படையான குற்றச்சாட்டுக்களின் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும். இந்தக் குற்றச்சாட்டுக்களின் பட்டியலும், ஒவ்வொரு குற்றச்சாட்டின் அடிப்படையான வாக்குமூலத்தையும் ஊழல் ஒழிப்பு ஆணையரிடம் எழுத்துபூர்வமாக தெரிவிக்கப்பட வேண்டும். ஊழல் ஒழிப்பு ஆணையருக்கு இக்குற்றச்சாட்டுக்களுக்கு எழுத்து மூலமாக பதிலளிக்க தேவையான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இந்த வாய்ப்புக்கான கால அவகாசம் மேலே குறிப்பிட்டுள்ள நீதிபதிகள் குழுவால் முடிவு செய்யப்படும்.

(6) தமிழக அரசு, சபாநாயகரால் முடிவெடுக்கப்பட்டால், ஊழல் ஒழிப்பு ஆணையர் மீதான வழக்கை நடத்த ஒரு வழக்கறிஞரை நியமிக்கலாம்.

(7) விசாரணைக்குப் பொறுப்பான குழு தம்முடைய நடவடிக்கையை ஒழுங்குபடுத்த விதிமுறைகளை அமைத்துக் கொள்ளலாம். அதோடு ஊழல் ஒழிப்பு ஆணையர் தம்முடைய தரப்பில் எழுத்துபூர்வமாக வாக்குமூலம் கொடுக்கவும்; சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவும்; ஆதாரங்களை அளிக்கவும், தம்முடைய வழக்கறிஞர் மூலமாக அல்லது தாமாகவே தம் தரப்பை எடுத்துச் சொல்லவும் வாய்ப்பு வழங்க வேண்டும்.

(8) உரிமையியல் விதித்தொகுப்பு, 1908-ன் கீழ் வரும் ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்களை இந்த விசாரணைக்கான குழு பெறும். குறிப்பாக:

(அ) எந்த ஒரு நபருக்கும் நீதிமன்ற அழைப்பு விடுத்து அவரை உறுதிமொழியின் கீழ் விசாரிக்கும் அதிகாரம்

(ஆ) ஆவணங்களை கண்டுபிடிக்கவும் சமர்ப்பிக்கச் செய்யவுமான அதிகாரங்கள்

(இ) உறுதிமொழியின் கீழ் வாக்குமூலம் மற்றும் ஆதாரங்களைப் பெறுவது.

(ஈ) சாட்சிகளை விசாரிக்கவோ ஆவணங்களைப் பரிசோதிக்கவோ வேறு நபர்களுக்கு அதிகாரம் கொடுப்பது அல்லது விலக்கு அளிப்பது.

(9) விசாரணைக்குப் பின் அதற்குப் பொறுப்பான குழு ஒரு அறிக்கை தயாரித்து அதை விசாரணைக்கான கோரிக்கை பெறப்பட்ட 90 நாட்களுக்குள் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(10) இவ்வறிக்கை, ஊழல் ஒழிப்பு ஆணையர் குற்றமற்றவர், மற்றும் தம் பணிகளை நிறைவேற்றத் தகுதி படைத்தவர் என்று சான்றளிக்குமானால், நிலுவையில் உள்ள அறிவிப்புத் தீர்மானத்தின் மீதோ, இவ்வறிக்கையின் மீதோ எந்த ஒரு மேல் நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை.

(11) இவ்வறிக்கை (இணை பிரிவு 9-ல் வருவது) ஊழல் ஒழிப்பு ஆணையர் குற்றவாளி தான் என்றோ அல்லது தம் பணிகளை சரிவர நிறைவேற்றத் தகுதியற்றவர் என்றோ குறிப்பிட்டால், இணைப்பிரிவு (2)-ல் குறிப்பிடப்பட்ட அறிவிப்புத் தீர்மானம் மற்றும் விசாரணைக்குப் பொறுப்பான நீதிபதியின் அறிக்கை இவை இரண்டும் சட்டசபையால் நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(12) இவ்வாறு இணைப்பிரிவு (2)-ல் குறிப்பிடப்பட்ட தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டால், ஊழல் ஒழிப்பு ஆணையரின் தவறான நடத்தை அல்லது தகுதியற்ற தன்மை நிரூபிக்கப்பட்டதாகக் கொள்ளப்படும். எனவே ஊழல் ஒழிப்பு ஆணையரைப் பதவி நீக்கம் செய்ய சபாநாயகரால் கையெழுத்திடப்பட்ட ஒரு கோரிக்கை மாநில ஆளுநருக்கு வழங்கப்படும்.

(13) இணைப் பிரிவு (12)-ன் கீழ் வரும் கோரிக்கைக்கு ஆளுநர் ஒப்புதலளித்தால் ஊழல் ஒழிப்பு ஆணையர் தம் பணியில் இருந்து நீக்கப்பட்டதாக இச்சட்டப்படி கொள்ளலாம்.

ஊழல் ஒழிப்பு ஆணையரப் பதவி நீக்கம் செய்ய சட்ட சபையில் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அவர் தம் பணிகளை நிறைவேற்றுவதில் இருந்து தடை செய்யப் படுவார்.

**பிரிவு 8 – ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

(1) ஊழல் ஒழிப்பு ஆணையம் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருக்க வேண்டும்:

- ஊழல் ஒழிப்புப் பிரிவு
- சேவை உரிமை பாதுகாப்புப் பிரிவு

(2) இவை இரண்டும் ஊழல் ஒழிப்பு ஆணையரின் தலைமையில் பணி புரிய வேண்டும். இணை ஊழல் ஒழிப்பு ஆணையர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஊழல் ஒழிப்பு ஆணையரால் ஆணையத்தின் பணிகளுக்கு குறிப்பான பொறுப்புக்கள் ஒதுக்கப்படுவார்கள்.

**அத்தியாயம் 3 - ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் ஊழல் ஒழிப்புப் பிரிவின் அதிகாரங்கள், பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைகள்**

**பிரிவு 9 - ஊழல் ஒழிப்புப் பிரிவின் அதிகாரங்கள்**

ஊழல் ஒழிப்பு ஆணையம் பின் வரும் பணிகளும் அதிகாரங்களும் பெற்றிருக்கும்:

(i) ஊழல் குற்றம் எதன் மீதும் நடக்கும் புலனாய்வின் மேல் மேற்பார்வை செய்யும் அதிகாரம்

(ii) ஊழல் குற்றம் எதனையும் புலனாய்வு செய்யும் அதிகாரிகளுக்கு ஆணைகள் இடுதல்

(iii) ஊழல் குற்றம் சம்பந்தப்பட்ட புலனாய்வு முடிவுக்கு வந்த பின்னர், சம்பந்தப்பட்ட பொது ஊழியருக்கு அதற்கு ஏற்ற தண்டனை (பணிநீக்கம், பதவி இறக்கம் ஆகியவை) விதிக்க (அவர்களின் தரப்பை முழுமையாகக் கேட்டறிந்த பின்னால்) சிபாரிசு செய்தல். இத்தகைய சிபாரிசுகளை அரசின் சம்பந்தப்பட்ட துறை நிறைவேற்றியே தீர வேண்டும்.

**(iv)** ஊழல் தடுப்புச் சட்டம். 1988-ன் கீழ் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வது.

(v) இந்தச் சட்டம் அமலான உடன் ஊழல் தடுப்பு ஆணையத்தின் வழக்குகளை விசாரிக்க ஒரு சிறப்பு நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியால் அமைக்கப்பட வேண்டும்.

(vi) ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்குக் கொடுக்கத் தக்க ஓய்வூதியம், மற்றும் படிகள் மற்றும் பிற வேலைக்கான நிபந்தனைகள் ஆகியவற்றுக்கான ஒழுங்கு விதிமுறைகளை உருவாக்குதல்

(vii) ஊழல் வெளிக்கொணர்பவர்களிடம் இருந்து புகார்கள் பெறுதல்

(viii) ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஏரில் புகார்கள் பெறுதல்

(ix) புலனாய்வு அதிகாரிகள் மற்றும் பிற அதிகாரிகளை வேலைக்கு எடுத்தல் மற்றும் அவர்களை நவீன அறிவியல் முறைகளுடன் புலனாய்வு புரிய பயிற்சியளித்தல்.

(x) நீதிமன்ற அதிகாரிகள், வழக்குத் தொடரும் அதிகாரிகள் மற்றும் மூத்த வழக்கறிஞர்களை நியமனம் செய்தல்.

(xi) முறையான புலனாய்வுக்கு ஏற்ற நவீனக் கருவிகளைப் பெறுதல்

**(xii)** இந்தச் சட்டத்தில் உள்ளபடி ஊழல் மூலமாக பெறப்பட்ட சொத்துக்களை பறிமுதல் செய்தல்

(xiii) முறைகேடாகப் பெறப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம், உத்தரவு, அனுமதி போன்றவற்றை நிராகரித்து சிபாரிசு செய்தல்; அல்லது ஊழலில் ஈடுபட்ட ஒரு நிறுவனம், ஒப்பந்ததாரர் அல்லாது வேறு மற்ற நபர் ஆகியோரை அரசு

ஒப்பந்தங்களில் இருந்து தடை செய்யுமாறு சிபாரிசு செய்தல். இவ்வாறு தரப்பட்ட சிபாரிசை சம்பந்தப்பட்ட பொதுத் துறை நிறைவேற்றலாம்; அல்லது பதினைந்து நாட்களுக்குள் தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கலாம். இவ்வாறு நிராகரிக்கப்பட்டால் ஊழல் ஒழிப்பு ஆணையம் தமிழ் நாடு உயர் நீதிமன்றத்தை அணுகி தக்க ஆணைகள் இடுமாறு கோரலாம்.

(xiv) இச்சட்டத்தின் கீழ் இடப்படும் ஆணைகளை சரியாக நிறைவேற்றவும் நிறைவேற்றத் தவறிய நபர்கள் மேல் தக்க அபராதம் இடவும் அதிகாரம் உண்டு.

(xv) புகாரின்றி ஊழல் பற்றிய தகவல் வந்தால் தாமாகவே புலனைவைத் தொடங்கும் அதிகாரம் உண்டு.

(xvi) பொதுத் துறைகளுடன் ஒத்துழைத்து ஊழலைக் குறைக்க மற்றும் ஊழலை வெளிக்கொணர்பவர்களை காப்பாற்ற தகுந்த வழிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளைக் கொண்டு வருதல். இவ்வாறு கொண்டு வரப்படும் வழிமுறைகளை தாம் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகளை அப்பொதுத் துறை ஊழல் ஒழிப்பு ஆணையத்திடம் இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை சமர்பிக்க வேண்டும்.

(xvii) இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்படும் கால வரையறைகள் முறையாகப் பின்பற்ற வைக்கும் அதிகாரம் உண்டு.

(xviii) தம்முடைய அதிகாரிகளின் நேர்மையை கண்காணித்தல் மற்றும் வளர்த்தல்; நேர்மை வழுவுவோற்கு தகுந்த தண்டனை அளித்தால் (பணிநீக்கம், மற்றும் பதவிக் குறைப்பு)

(xix) குறிப்பான உதவிகள் தேவைப்பட்டால் பொதுத் துறைகளிடம் அவற்றைக் கோரி பெறுவது

(xx) ஊழல் குற்றங்கள் சம்பந்தப்பட்ட புகார்களை ஊக்குவிக்க தகுந்த பரிசளிப்புத் திட்டங்கள் உருவாக்குவது. இவ்வாறு அளிக்கப்படும் பரிசுகள் காப்பாற்றப்படும் அரசுக்கான மொத்த நஷ்டத்தில் பத்து சதவிகிதத்தை மீறலாகாது.

(xxi) ஊழல் தடுப்பிற்கான நடவடிக்கைகளை லோக்ஆயுக்தா எடுக்க வேண்டும்.

## பிரிவு 10 - ஊழல் ஒழிப்பு ஆணையர் மற்றும் இணை ஊழல் ஒழிப்பு ஆணையர் ஆகியோரால் விசாரணை செய்யத் தக்க புகார்கள்

(1) ஊழல் ஒழிப்பு ஆணையர் இந்தச் சட்டத்தின் விதிகளின்படி, ஒரு பொது ஊழியரின் (இதில் முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் அடக்கம்) நடவடிக்கைகள் அல்லது ஒரு பொது ஊழியரின் பொதுவான அல்லது குறிப்பான சம்மதத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆகியவற்றின் மேல் கொடுக்கப்படும் ஊழல் புகார், அல்லது சேவை மறுப்புப் புகார் ஆகியவற்றின் மேல் விசாரணை செய்யலாம்.

(2) இணை ஊழல் ஒழிப்பு ஆணையர் இந்தச் சட்டத்தின் விதிகளின்படி, ஒரு பொது ஊழியரின் (இதில் முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்க மாட்டார்கள்) நடவடிக்கைகள் அல்லது ஒரு பொது ஊழியரின் பொதுவான அல்லது குறிப்பான சம்மதத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆகியவற்றின் மேல் கொடுக்கப்படும் ஊழல் புகார், அல்லது சேவை மறுப்புப் புகார் ஆகியவற்றின் மேல் விசாரணை செய்யலாம்.

(3)இணைப்பிரிவு (1)–ன் கீழ் ஒரு விசாரணையை நடத்த ஊழல் ஒழிப்பு ஆணையருக்கு எவருடைய அனுமதியையும் பெற வேண்டிய தேவையில்லை.

**பிரிவு 11 - ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் புகார் நடைமுறை**

(1) இந்தச் சட்டத்தின் விதிகளின்படி, எவர் ஒருவரும் ஊழல் ஒழிப்பு ஆணையர் அல்லது இணை ஊழல் ஒழிப்பு ஆணையரிடம் புகார் அளிக்கலாம்

சேவை மறுப்புப் புகார்களில் பாதிக்கப்பட்ட நபர் இறந்து போனால், அல்லது ஏதாவது ஒரு காரணத்தால் தம் செயல்களைத் தாமே நிறைவேற்றிக் கொள்ளச் சக்தியற்று இருந்தால், அப்புகாரை அளிக்க (அல்லது) அளிக்கப்பட்ட புகாரின் மேல் முறையீடுகளில் பங்கேற்க அந்நபரின் சட்டபூர்வமான பிரதிநிதிகள் அல்லது அந்த நபரால் எழுத்துபூர்வமாக இந்த விவகாரத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் உரிமை பெற்றவராவார்.

(2) ஒவ்வொரு புகாரும் ஒரு முறையான உறுதிச் சான்றுடன் தரப்படும் வாக்குமூலத்தின் வடிவில் இருத்தல் வேண்டும். மேலும் அதன் வடிவம் மற்றும் முறைகள் விதிகளின்படி இருத்தல் வேண்டும்.

(3) ஊழல் ஒழிப்பு ஆணையர் தாமாகவே ஒரு ஊழல் செயல் மீது அல்லது ஊழல் செயல் பற்றித் தரப்படும் புகார் மீது விசாரணை நடத்தலாம். இந்தச் சட்டத்தின் பிற பணிகளையும் அவர் நிறைவேற்ற வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின் கீழ் ஊழல் ஒழிப்பு ஆணையத்திற்கு அளிக்கப்படும் புகாரில் குறிக்கப்படும் விவகாரங்கள் எவையும் விசாரணைக் குழு சட்டம், 1952-ன் கீழ் வேறு விசாரணைக்கு அனுப்பப்படக் கூடாது.

(5) ஒரு ஊழல் பற்றிய குற்றச்சாட்டு, இந்தச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன் அல்லது இந்தச் சட்டம் அமலுக்கு வருவதற்கு பின் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு விசாரணை தொடங்கப்படுவதற்கு முன், விசாரணைக் குழுக்கள் சட்டம், 1952-ன் கீழ் நிலுவையில் இருக்கும் என்றால், அது அந்த (முந்தைய) விசாரணையில் தொடரும்.

**பிரிவு-12 - புலனாய்வுப் பிரிவு மற்றும் வழக்குப் பிரிவு**

1. ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் புலனாய்வுப் பிரிவு தற்போது அமைந்துள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை ஆகும். இத்துறை மேலும் ஆளெடுத்தல் மற்றும் பிற புலனாய்வு அலுவலர்களை துணைக்கெடுத்தல் என்று ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் தேவைகளுக்கேற்ப மேலும் விரியலாம்.
2. இந்தச் சட்டத்தின் கீழ் வரும் எந்தப் புகாரின் தொடர்பாகவும் பொது ஊழியர்களின் மேல் வழக்குத் தொடர ஊழல் ஒழிப்பு ஆணையர் ஒரு வழக்குப் பிரிவு இயக்குனரையும், அவருக்குத் தேவையான அதிகாரிகள் மற்றும் ஊழியர்களையும் நியமனம் செய்தல் வேண்டும். ஊழல் ஒழிப்பு ஆணையரின் ஒப்புதலின் பேரில், இந்த வழக்குப் பிரிவு இயக்குனர் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வார். அதோடு ஊழல் ஒழிப்புச் சட்டம், 1988 -ன் கீழ் வரும் எந்த ஒரு குற்றச் செயலையும் தண்டிக்கப் பொது ஊழியர்கள் மேல் வழக்குத் தொடர்ந்து நடத்த அனைத்து நடவடிக்கையும் எடுப்பார்.

**பிரிவு 13 - விசாரணை நடைமுறை**

1) ஊழல் ஒழிப்பு ஆணையர் ஒரு புகாரின் பேரிலும், அல்லது தாமாகவே எடுத்துக் கொண்ட ஒரு ஊழல் விவகாரத்திலும் முதலில் விசாரணை தொடங்கும் முன்னால், தாமே, அல்லது வேறு ஒரு அலுவலர் மூலமாக அப்புகார் அல்லது விவகாரத்தில் முகாந்திரம் உள்ளதா என்று கண்டுபிடிக்க முயற்சி செய்யலாம். இவ்வாறு முகாந்திரம் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டால் இந்தக் கண்டுபிடிப்பை பதிவு செய்வதோடு, புகார் அளித்தவருக்கும் இம்முடிவைத் தெரிவித்து மேல் விசாரணையை நிறுத்தி விடலாம்.
2) புகாரை சரிபார்க்கும் நடைமுறை (மேலுள்ள இணை பிரிவு (1)-ல் உள்ளது போல) ஒவ்வொரு புகாருக்கும் ஏற்ற வகையில் இருக்கலாம். குறிப்பாக சம்பந்தப்பட்ட பொது ஊழியரின் வாக்குமூலத்தை ஊழல் ஒழிப்பு ஆணையர் பெறலாம்.
3) இவ்வாறு முகாந்திரத்தைப் பரிசோதித்த பின்னர், ஊழல் புகார் மீது விசாரணை நடத்த ஊழல் ஒழிப்பு ஆணையர்:-

(அ) புகாரின் நகலை சம்பந்தப்பட்ட பொது ஊழியருக்கு அனுப்பலாம்.

(ஆ) பொது ஊழியருக்குப் புகாரின் மீது தம்முடைய விளக்கத்தை பதிவு செய்ய வாய்ப்புத் தரலாம்.

(இ) புகார் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பறிமுதல் செய்து பாதுகாப்பாக வைக்க நடவடிக்கை எடுக்கலாம்.

5. ஏதாவது ஒரு புகாரில் ஊழல் ஒழிப்பு ஆணையர் புகாரை தள்ளுபடி செய்ய முடிவெடுத்தால் அல்லது புகாரின் மீதான விசாரணையை நிறுத்த முடிவெடுத்தால், அவர் தம்முடைய காரணங்களைப் பதிவு செய்வதோடு அவற்றை புகார் அளித்தவருக்கும் பொது ஊழியருக்கும் தெரிவிக்க வேண்டும்.

6. புகாரளிப்பவர் பெயர் தெரிவிக்காமல், ஆனால் தகுந்த முகாந்திரமளிக்கும் ஆதாரங்களுடன் புகார் அளிக்கப்பட்டால் ஊழல் ஒழிப்பு ஆணையர் தாமே அப்புகாரை எடுத்து விசாரணை நடத்தலாம்.

7. புகாரளிப்பவர் தம்முடைய பெயர் ரகசியமாக வைக்கப்பட வேண்டும் என்று கோரலாம்.

8. விசாரணை 6 மாத காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். மிக அரிதான சில வழக்குகளில் ஒரு வருடம் வரை விசாரணை நீட்டிக்கப்படலாம்.

9. மாற்று விதிகள் இல்லாத பட்சத்தில், இந்தச் சட்டத்தின் கீழ் வரும் விசாரணையின் நடைமுறைகள், விதிகள் மூலமாக ஒழுங்குபடுத்தப்படலாம்.

**பிரிவு 14 - விசாரணை அதிகாரியின் அதிகாரங்கள்**

1. ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ன் கீழ் குற்றங்களை புலனாய்வு செய்யத் தகுதி பெற்ற புலனாய்வு அதிகாரிகள் குற்றவியல் நடைமுறை விதிகளின்படி புலனாய்வு செய்ய தகுதி பெற்ற ஒரு காவல் துறை அதிகாரியின் அதிகாரங்களைப் பெறுவார்கள்.
2. இந்தச் சட்டத்தின் கீழ் தம் அதிகாரங்களைப் பயன்படுத்தும் ஊழல் ஒழிப்பு ஆணையர் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் அதிகாரி, உரிமையியல் நடைமுறை விதித்தொகுப்பின் (Code of Civil Procedure, 1908) கீழ் ஒரு வழக்கை விசாரிக்கும் உரிமையியல் நீதிமன்றத்தின் (civil court) அதிகாரங்களைப் பெறுவார். குறிப்பாக:

- இந்தியாவின் எந்தப் பகுதியில் இருந்தும் ஒரு நபரை வரவழைக்க மற்றும் உறுதிமொழியின் கீழ் விசாரிக்கவும்;
- எந்த ஒரு ஆவணத்தினையும் கண்டுபிடிக்கவும், ஆணையத்திடம் ஒப்படைக்கவும்;

- உறுதிச்சான்றின் (affidavit) மீது ஆதாரங்கள் பெறவும்;
- எந்த ஒரு நீதிமன்றம் அல்லது அலுவலகத்தில் இருந்தும் ஒரு பொது ஆவணம் அல்லது அதன் நகலைப் பெறவும்;
- சாட்சிகளை விசாரிக்க அல்லது ஆவணங்களைப் பரிசோதிக்க ஆணையிடவும்;
- விதிப்படி வேறு நடவடிக்கை எடுக்கவும்;

அதிகாரம் உண்டு,

(3) புலனாய்வு அதிகாரியின் மேற்பதவியில் உள்ள ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவை சேர்ந்த அனைத்து உறுப்பினர்கள் மற்றும் மேற்பதவியில் உள்ள அனைத்து ஊழல் ஒழிப்பு ஆணைய அதிகாரிகளுக்கும் புலனாய்வு அதிகாரியின் அதே அதிகாரங்கள் உண்டு.

(4) புலனாய்வின் போது, ஊழல் ஒழிப்பு ஆணையர், ஒரு அரசு ஊழியர் தம் பதவியில் இருப்பது புலனாய்வுக்கு பாதகம் விளைவிக்கும் என்று நினைத்தாலோ; அல்லது சம்பந்தப்பட்ட அந்த அரசு ஊழியர் ஆதாரங்களை அழிப்பார் அல்லது மாற்றுவார்; மற்றும் சாட்சிகளை மாற்ற முயற்சி செய்வார்; அல்லது ஊழலைத் தொடர முயற்சி செய்வார் என்றோ தோன்றினால், ஊழல் ஒழிப்பு ஆணையர் அந்த அரசு ஊழியரின் பணி மாற்றம் அல்லது தற்காலிகப் பணிநீக்கம் ஆகிய நடவடிக்கைகளுக்கு ஆணைகள் இடலாம்.

(5) ஊழல் ஒழிப்பு ஆணையர், இச்சட்டத்தின் கீழ் புலனாய்வு நடக்கும் எந்த நேரத்திலும் ஒரு இடை ஆணையின் மூலமாக, ஒரு பொது ஊழியர் முறைகேடான வகையில் பெற்ற சொத்துக்களை மறைக்கவோ, அல்லது வேறிடத்திற்கு அனுப்பவோ முடியாமல் தடுக்க, தேவையான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கலாம்.

(6) 1988 ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் எந்தக் குற்றத்தையும் விசாரிக்க தகுதி பெற்றிருந்தாலும், ஊழல் ஒழிப்பு ஆணையர், அதே குற்றப் புலனாய்வில் வேறு சட்டங்களிற்குப் புறம்பாக நடக்கும் எந்த ஒரு குற்றத்தையும் புலனாய்வு செய்யலாம்.

**பிரிவு 15 - தேடுதல் மற்றும் பறிமுதலுக்கான அதிகாரங்கள்**

தம்மிடம் இருக்கும் தகவலை வைத்து, ஊழல் ஒழிப்பு ஆணையர், இந்தச் சட்டத்தின் கீழ் நீதிமன்ற அழைப்பு அல்லது அறிவிப்பு பெற்ற, அல்லது பெறப் போகும் ஒரு நபர், புலனாய்வு மற்றும் பிற நடவடிக்கைகளுக்குத் தேவையான அல்லது பயன்படும் ஒரு பொருள் அல்லது ஆவணம் போன்றவற்றை கொடுக்கத் தடையாக இருந்தால் - ஒரு தேடுதல் ஆணையின் (search warrant) மூலமாக காவல் துறை ஆய்வாளர் அல்லது

அதற்கு மேலான பதவி வகிக்கும் எந்த ஒரு அதிகாரியையும் தேடுதல் நடவடிக்கை எடுக்கவோ, ஆய்வு செய்யவோ (குறிப்பாக, எந்த ஒரு இடத்திலும் நுழையவும் தேடவும்) அதிகாரம் கொடுக்கலாம். இந்த தேடுதல் ஆணை குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பு (1973)-ன் கீழ் வரும் விதிகளின்படி நடைபெறும்.

**பிரிவு 16 – ஊழல் தடுப்பு நடவடிக்கைகள்**

பிரிவு 9(xxi) படி ஊழல் தடுப்பிறகான நடவடிக்கைகளை லோக்ஆயுக்தா எடுக்க வேண்டும். புலனாய்வு பிரிவு பல துறைகளில் தாமாகவோ அல்லது லஞ்சம்/ ஊழல் பற்றிய விவரங்கள் அறிந்தோ அவ்வப்போது திடீர் பரிசோதனை செய்ய வேண்டும். மேலும் அவர்கள் 'Trap' முறைகள் பயன்படுத்தியும் லஞ்சம் வாங்குபவர்களை பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு கோடிக்கு மேல் உள்ள டெண்டர் விவரங்கள் அனைத்தையும் அந்தந்த துறைகளின் தலைமை அதிகாரி லோக்ஆயுக்தாவிற்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும். லோக்ஆயுக்தா அவற்றை பொது மக்கள் பார்வைக்கு இணையதளத்தில் பதிவிட வேண்டும். மேலும் அதில் முறைகேடு நடக்கும் சந்தேகம் இருந்தால் தாமாகவே முன்வந்து விசாரிக்கலாம்.

**பிரிவு 17 - பொதுத் துறைகளுக்கு ஊழல் ஒழிப்பு ஆணையம் சிபாரிசுகள் வழங்கும் அதிகாரம்**

இந்தச் சட்டத்தின் கீழ் நடைபெறும் புலனாய்வின் போது, ஊழல் ஒழிப்பு ஆணையம், ஊழல் நடைபெறும் ஒரு செயலைத் தடுக்க, பொதுநல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்தால், இவ்வாணையம் இந்தச் செயலில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு பொதுத் துறைக்கும், அவர்தம் முடிவுகளைத் தடை செய்ய அல்லது நிறுத்தி வைக்க அல்லது ஒரு நடவடிக்கை எடுக்கச் சிபாரிசு செய்யலாம். சம்பந்தப்பட்ட பொதுத் துறை இவாறு சிபாரிசு அளிக்கப்பட்ட 15 தினங்களுக்குள் ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் சிபாரிசுகளை நிறைவேற்றலாம்; அல்லது தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கலாம். இவ்வாறு நிராகரிக்கப்பட்டால், ஊழல் ஒழிப்பு ஆணையம் பொதுத் துறைக்கு தகுந்த ஆணைகள் இட வேண்டி, தமிழ் நாடு உயர் நீதிமன்றத்தை அணுகலாம்.

**பிரிவு 18 - ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் நடைமுறைகள்**

(1)ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் எந்த ஒரு நடைமுறை மற்றும் செயலும் கீழ்க்கண்ட காரணங்களுக்காக செல்லுபடி ஆகாமல் போகாது:

(அ) ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் பணிகளில் உள்ள காலியிடங்கள்; மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகள்

(ஆ) ஊழல் ஒழிப்பு ஆணையக் குழுவின் உறுப்பினர்களின் நியமனத்தில் உள்ள குறைபாடுகள்

(இ) வழக்கின் உண்மை நிலையை பாதிக்காத எந்தவொரு குறைபாடுகள்

**(2)** ஊழல் ஒழிப்பு ஆணையக் குழு, ஒழுங்கு விதிமுறைகளின் மூலமாக, ஒழுங்கு விதிமுறைகள் அமைத்தல், வழக்குகளை பகிர்ந்தளித்தல், வழக்குகளை மாற்றியளிப்பது, அதிகாரங்கள் மற்றும் பணிகளை பிரித்தளிப்பது முதலான அனைத்துக் கொள்கை முடிவுகளும் எடுக்கலாம்.

(3) எந்த ஒரு வழக்கிலும், புலனாய்வு, புலனாய்வு அதிகாரியால், காரணங்கள் பதிவு செய்யப்படாமல் நிறுத்தப்படக் கூடாது. எந்த ஒரு வழக்கையும் முற்றுப் பெறச் செய்ய ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் ஒழுங்கு விதிமுறைகளின்படி பொறுப்பான அதிகாரியே ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(4) ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் நடைமுறையில், அமர்வுகள் யாவும் வெளிப்படையாக பொதுமக்கள் பார்வைக்கு ஏற்ற வகையில் நடத்தப்பட வேண்டும். இதற்கு மாறாக ரகசிய அமர்வுகள் மிக அரிதான வழக்குகளில் நடத்தப்பட்டால், அதற்கான காரணங்கள் எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்பட்ட பின் மட்டுமே இவ்வமர்வுகள் பொது மக்கள் பார்வையின்றி நடத்தப்படலாம். வெளிப்படையாக நடக்கும் அமர்வுகள் யாவும் காணொளியில் பதிவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு நகலெடுக்கும் கட்டணம் கொடுத்த பின் வழங்கப்பட வேண்டும்.

### பிரிவு 19 – அவமதிப்பிற்கு தண்டனை வழங்கும் அதிகாரம்

ஒரு உயர் நீதிமன்றத்திற்கான நீதி வரைமுறை அதிகாரங்கள், அவமதிப்பைப் பொறுத்த வரையில் ஊழல் ஒழிப்பு ஆணையத்திற்கு இருக்கும். இதன்படி நீதிமன்ற அவமதிப்புச் சட்டம், 1971 (1971-ன் மத்திய சட்டம் 70) உயர் நீதி மன்றத்தை குறிக்கும் இடங்களில் ஊழல் ஒழிப்பு ஆணையர் மற்றும் இணை ஊழல் ஒழிப்பு ஆணையரையும் சேர்த்துக் குறிக்குமாறு கொள்ள வேண்டும்.

### பிரிவு 20 – ஊழல் ஒழிப்பு ஆணையத்திற்குப் பாதுகாப்பு

(1)நல்ல நோக்கத்தோடு இச்சட்டத்தின் கீழ் வரும் நடவடிக்கைகளை எடுக்கும் ஊழல் ஒழிப்பு ஆணையர், இணை ஊழல் ஒழிப்பு ஆணையர், மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் ஊழியர்கள் ஆகியோர் மீது எந்த ஒரு வழக்கோ, சட்ட ரீதியான நடவடிக்கையோ எடுக்கப்பட மாட்டாது.

(2) பொதுவான உரிமையியல் நீதி வரைமுறைக்குள் வரும் எந்த ஒரு நீதிமன்றத்திற்கும் ஊழல் ஒழிப்பு ஆணையர், மற்றும் இணை ஊழல் ஒழிப்பு ஆணையர் ஆகியோரின் முடிவுகளை அல்லது நடைமுறைகளை எதிர்க்கவோ, தடை செய்யவோ அதிகாரம் கிடையாது.

**அத்தியாயம் 4 – ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் சேவை உரிமைப் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரங்கள், பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைகள்**

**பிரிவு 21 - வழங்கப்படும் சேவைகள்** :

1. தகுதிவாய்ந்த நபர்களுக்குரிய சேவைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் அதற்கான பொறுப்புள்ள அதிகாரி வழங்குவார்.

**பிரிவு 22 - சேவைகளைப் பெறுவதற்குரிய வழிமுறைகள்** :

2. எந்த துறையின் சேவையைப் பெற வேண்டுமோ அந்த துறைக்கு பரிந்துரைக்கப்பட்ட முறையில் கடிதம் அளித்தோ அல்லது பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை அளித்தோ சேவையைப் பெறலாம். விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்ட நேரம் மற்றும் தேதி குறிப்பிட்ட ரசீதினை அந்தத் துறையின் சார்பில் வழங்க வேண்டும்.

3. ரசீது வழங்கப்பட்ட விண்ணப்பம் அந்தத் துறையின் குறிப்பிட்ட அதிகாரியால் குறிப்பிட்ட காலத்திற்குள் பரிசீலிக்கப்பட்டு சேவை வழங்கப்படும் அல்லது நிராகரிக்கப்படும். அவ்வாறு நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களுக்குரிய காரணங்களை அவ்வதிகாரி எழுத்து மூலமாக பதிவு செய்து விண்ணப்பதாரருக்கு அளிக்க வேண்டும்.

4. அனைத்து அதிகாரிகளும் தங்களிடம் வந்த எல்லா விண்ணப்பங்களைப் பற்றிய விவரங்களையும் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்களையும் பராமரிக்க வேண்டும்.

**பிரிவு 23 - முதல் முறையீடு**

1. ஊழல் ஒழிப்பு ஆணையரால் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் சேவை உரிமை பாதுகாப்பு ஆணையம் ஊழல் தடுப்பு ஆணையம் அமைக்கப்பட்ட மூன்று மாதத்திற்குள் அமைக்கப்படும்.

2. இந்த சேவை உரிமை பாதுகாப்பு ஆணையம் முதலாம் மேல் முறையீட்டு மையமாகக் கருதப்படும்.

3. சேவையைப் பெற அளித்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட ஒருவரோ அல்லது குறிப்பிட்ட கால நிர்ணயத்திற்குள் தனக்குரிய சேவையை பெற முடியாதவரோ முதல் முறையீட்டு அலுவலரிடம் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள்ளாகவோ அல்லது காலநிர்ணயம் முடிந்த பின்னோ விண்ணப்பிக்கலாம்.

4. முதல் முறையீட்டு அலுவலர் அவர்கள் விண்ணப்பதாரர் மற்றும் சேவையின் பொறுப்பு அதிகாரி ஆகிய இருவர் தரப்பையும் அழைத்து விவரங்களைக் கேட்டறிய வேண்டும். இந்த அமர்வு மேல் முறையீட்டு விண்ணப்பம் பெறப்பட்டு பதினைந்து நாட்களுக்குள் நடைபெற வேண்டும். இறுதியில் விண்ணப்பம் நியாயமான சேவைக்காக அளிக்கப்பட்டிருந்தால் முதல் முறையீட்டு அலுவலர் அவர்கள் சேவையின் பொறுப்பு அதிகாரியை மூன்று நாட்களுக்குள் சேவை வழங்கும்படி உத்தரவிட வேண்டும்..

5. மேலும் விண்ணப்பம் நியாயமானதாக உள்ளதாக முதல் முறையீட்டு அலுவலர் கருதும் பட்சத்தில் சேவையின் பொறுப்பு அதிகாரியை சேவையை வழங்க கால தாமதம் செய்த ஒவ்வொரு நாளுக்கும் ரூபாய் 500 அபராதம் செலுத்த உத்தரவிடுவார்.

6. முதல் முறையீட்டு அலுவலர் விண்ணப்பம் நியாயமற்றதாக கருதினால் நிராகரிக்கப்பட்டதற்குரிய காரணங்களை எழுத்தில் பதிவு செய்து விண்ணப்பதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அனுப்பி வைப்பார்.

**பிரிவு 24 – இரண்டாம் முறையீடு** :

1. இரண்டாம் மேல் முறையீட்டு அலுவலர் என்பவர் ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் தலைவராகவோ அல்லது இணை ஊழல் தடுப்பு ஆணையராகவோ அல்லது ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் உறுப்பினராக இருக்க வேண்டும்.

2. முதலாம் முறையீட்டு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட அல்லது குறிப்பிட்ட கால வரையறைக்குள் எந்த விதமான பதிலும் பெறாத நபர், இரண்டாம் முறையீட்டு ஆணையத்திடம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பமானது நிராகரிக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்குள்ளாகவோ அல்லது கால வரையறை முடிந்து முப்பது நாட்களுக்கு முன்னதாகவோ அளிக்கப்பட வேண்டும்.

3. இரண்டாம் முறையீட்டு அலுவலர், சேவையின் பொறுப்பான அதிகாரி மற்றும் விண்ணப்பதாரரிடம் விசாரணை மேற்கொள்வார். இவ்விசாரணை அமர்வு முறையீடு பெறப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் நடைபெற வேண்டும். விசாரணையின் இறுதியில் விண்ணப்பதாரரின் தரப்பில் நியாயமிருப்பின் அவர் சேவையின் பொறுப்பான அதிகாரியை மூன்று நாட்களுக்குள் சேவை வழங்க உத்திரவிடுவார்.

4. மேலும் காலவரையறையைத் தாண்டி சேவை வழங்கப்பட்ட ஒவ்வொரு நாளுக்கும் சேவையின் பொறுப்பான அதிகாரியை ரூ.500 வழங்கச் சொல்லி இரண்டாம் முறையீட்டு அலுவலர் உத்தரவிட வேண்டும். ஒரே தவணை அபராதமாக ரூ.5000த்தை முதல் முறையீட்டு அலுவலர் விண்ணப்பதாரருக்கு வழங்க வேண்டுமென்றும் உத்தரவிட வேண்டும்.

5. விண்ணப்பதாரரின் கோரிக்கை நியாயமற்றதாக இரண்டாம் முறையீட்டு அலுவலர் கருதினால், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்குரிய காரணங்களை எழுத்து மூலமாக பதிவு செய்து முப்பது நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு வழங்க வேண்டும்.

**பிரிவு 25 - நேரில் வரவழைக்க அல்லது ஆய்வு செய்ய உத்திரவிடும் அதிகாரம்**

1. இந்த சட்டத்தில் உள்ள பிரிவுகளின் கீழ் முதல் முறையீட்டு அலுவலர், மற்றும் இரண்டாம் முறையீட்டு அலுவலர்கள் தங்களிடம் வரும் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் போது , குடும்ப நீதிமன்றத்தில் வழக்கை விசாரிப்பவருக்கு இருக்கக்கூடிய உரிமையியல் நடைமுறை விதித்தொகுப்பு 1908 ன் படி உள்ள அனைத்து அதிகாரங்களும் இருக்கும்.

அ. ஆவணங்களை தயாரிக்க அல்லது ஆய்வு செய்ய உத்திரவிடுதல்.

ஆ. சேவையின் பொறுப்பான அதிகாரியை மற்றும் விண்ணப்பதாரரை விசாரிக்க அழைக்கும் அதிகாரம்.

இ. வழக்கின் போது குறிப்பிடப்படும் வேறு பிற விசயங்கள் .

**பிரிவு 26 - விண்ணப்பதாரருக்குரிய இழப்பீடு**

1. முறையீட்டு அலுவலர்கள் விண்ணப்பங்களை பரிசீலித்து விண்ணப்பதாரருக்குரிய சேவையானது சேவையின் பொறுப்பான அதிகாரியின் நடவடிக்கையின்மையால் தாமதமானதாக கருதினால், முதலாம் மற்றும்

இரண்டாம் முறையீட்டு அலுவலர்கள் தாங்கள் வசூல் செய்த அபராதத்தில் 50% குறையாமலும் 90% மிகாமலும் வாங்க வேண்டும்.

**பிரிவு 27 - துறைரீதியான நடவடிக்கை**

1. முதலாம் மற்றும் இரண்டாம் முறையீட்டு அலுவலர்கள் விசாரணையின் இறுதியில் சேவையின் பொறுப்பான அதிகாரி மற்றும் முதல் முறையீட்டு அலுவலர்கள் தங்கள் கடமையைச் செய்ய தவறியதாக கருதினால், அவர்கள் மீது சேவை விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யலாம்.

2. எல்லா முறையீட்டு அலுவலர்களும் தாங்கள் விதித்த அபராதம் மற்றும் விண்ணபதாரரிடம் வழங்கிய அபரதாம் குறித்த விபரங்கள் அடங்கிய அறிக்கையை ஒவ்வொரு மாதமும் ஊழல் ஒழிப்பு ஆணையத்திடம் அளிக்க வேண்டும்.

3.. அபராதம் விதிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் செலுத்தத் தவறும் அதிகாரிகள் உடனடியாக இடைநீக்கம் செய்யப்படுவார்கள்.

**பிரிவு 28 - ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் சேவை உரிமைப் பிரிவின் மற்ற செயல்பாடுகள்**

1. ஊழல் ஒழிப்பு ஆணையமானது இரண்டாம் முறையீட்டு ஆணையமாக செயல்படுவதோடு மட்டுமில்லாமல், இந்த சட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யவும் மற்றும் அரசுக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்கி சேவைகளை மேம்படுத்த வேண்டும். ஊழல் ஒழிப்பு ஆணையர் அல்லது இணை ஊழல் ஒழிப்பு ஆணையர் இதற்காக கீழே குறிப்பிடப்பட்ட பணிகளைச் செய்வார்:

(i) தோல்வியடைந்த சில விண்ணப்பங்களை தானாக முன் வந்து விசாரணைக்கு எடுத்து இந்த சட்டத்தின்படி சேவை வழங்க முயற்சிக்க வேண்டும் மேலும் இந்த விண்ணப்பங்களை பொருத்தமான மற்ற விண்ணப்பங்களுக்கு முன்னுதாரணமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

(ii) சேவை வழங்கும் அலுவலகங்கள், மற்றும் முதல் முறையீட்டு அலுவலரின் அலுவலகம் ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

(iii) மாநில அரசில் பணிபுரியும் எந்த அதிகாரி அல்லது ஊழியராவது இந்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி தன்னுடைய கடமையை சரியாக

செய்யவில்லை என்று கருதினால் அவர் மீது துறை ரீதியான நடவடிக்கைக்கு உத்திரவிடலாம்.

(iv) சேவையை விரைவாகவும், வெளிப்படையாகவும் மற்றும் உரிய முறையில் வழங்குவதற்கு நடைமுறைகளை மாற்றியமைக்க பரிந்துரை செய்தல்.

**அத்தியாயம் 5 – ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் பொறுப்புக்கூறல்**

**பிரிவு 29 - ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் தணிக்கை**

தணிக்கையாளர் மற்றும் பொதுக்கணக்காய்வாளர் (CAG) ஆண்டின் நிதி மற்றும் செயல்பாட்டு கணக்காய்வை மேற்கொள்வார்.

**பிரிவு 30 – ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் அறிக்கைகள்**

1. ஊழல் ஒழிப்பு ஆணையம் ஆண்டுதோறும் அதன் செயல்பாடு குறித்த அறிக்கையை ஆளுநரிடம் அளிக்கும். அறிக்கையை சமர்பிக்கத் தவறினால் அது விதிமீறலாகக் கருதப்படும்.

2. ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் ஆண்டறிக்கையின் பெற்ற பின், ஆளுநர் தன்னுடைய விளக்க மனுவையும் சேர்த்து தமிழக சட்டசபையின் அடுத்த கூட்டத்தொடரில் தாக்கல் செய்ய வேண்டும்.

3. ஊழல் ஒழிப்பு ஆணையம் மாதந்தோறும் தன்னுடைய இணையபக்கத்தில் முந்தைய மாதம் வந்த புகார்கள் பற்றிய விவரங்கள், தீர்க்கப்பட்ட புகார்கள் மற்றும் அதன் விவரங்கள், புகார்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதன் வெளிப்பாடுகள், பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள், மீதமுள்ள புகார்கள், ஊழல் தடுப்பு ஆணையக் குழுவின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விவரங்கள் ஆகியவைகளை பொதுமக்கள் எளிதாக பெறும் வண்ணம் வெளியிட வேண்டும்.

4. அனைத்து முதல் தகவல் அறிக்கையும் இணையதளத்தில் வெளிப்படையாக வைக்கப்பட வேண்டும். புலனாய்வு பிரிவு, வழக்குப் பிரிவு மற்றும் சேவை உரிமை பிரிவின் மாவட்ட/ யூனிட் பிரிவின் அறிக்கைகள் மாதாமாதம் லோக்ஆயுக்தாவிற்கு அனுப்பப்பட வேண்டும். அவை இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

**பிரிவு 31 - ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் வெளிப்படைத்தன்மை**

ஊழல் ஒழிப்பு ஆணையம் தன் செயல்பாட்டை முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பான அனைத்து விவரங்களையும் தங்களுடைய இணையதளத்தில் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள வசதியாக பராமரிக்க வேண்டும். மேலும் ஊழல் ஒழிப்பு ஆணையம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 8ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளைத் தவிர்த்து தகவல் அறியும் உரிமைச்சட்டம் பிரிவு 4ல் குறிப்பிட்டுள்ள அனைத்துத் தகவல்களுக்கும் உரிய வெளிப்படைத் தன்மையுடன் கையாள்வதை உறுதி செய்யும்.

**பிரிவு 32 – ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் குறை கேட்பு மையம்**

1. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறைகேட்பு மையங்கள் ஊழல் தடுப்பு ஆணையத்தில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் மீதான குற்றச்சாட்டுகளைப் பெற அமைக்கப்படும்.

2. இந்த குறைகேட்பு மையத்தில் மொத்தம் இரண்டு பேர் பணி புரிவார்கள். அவர்கள் இந்த சட்டத்தில் பிரிவு 4ல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் உறுப்பினர்கள் தேர்வு செய்த முறையில் தேர்வு செய்யப்பட வேண்டும்.

3. ஊழல் ஒழிப்பு ஆணைய அதிகாரிகளுக்கு எதிராக பெறப்படும் குற்றச்சாட்டுகள் பொது மக்கள் முன்னிலையில் புகார் பெறப்பட்ட இரண்டு மாத காலத்திற்குள் முடிக்கப்படும். ஊழல் ஒழிப்பு ஆணைய அதிகாரி தன்னுடைய விளக்கத்தை அளிக்க உரிய வாய்ப்பு வழங்கப்படும். அதிகாரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அல்லது ஒழுங்கீன நடவடிக்கை அல்லது ஊழல் நிரூபிக்கப்பட்டால் குறைகேட்பு மையம் அவர் தற்காலிகப் பதவ நீக்கம் செய்யப்பட வேண்டும். பிறகு குறை கேட்பு மையம் அவர் மீது ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

**பிரிவு 33 - விசாரணை மற்றும் வழக்கினை முடிப்பதற்குரிய கால அவகாசங்கள்**

(1) அனைத்து ஊழல் ஒழிப்பு ஆணைய புலனாய்வு அதிகாரிகளும் தம்மிடம் வரும் வழக்குகளை ஆறு மாத காலத்திற்குள் விசாரணையை முடிக்க வேண்டும். ஒருவேளை கூடுதல் அவகாசம் தேவைப்பட்டால் ஊழல் தடுப்பு ஆணையக் குழுவிடம் விண்ணப்பிக்கலாம். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் ஒரு வருடத்திற்கு மேல் எந்த வழக்கையும் விசாரிக்க கால அவகாசம் அளிக்கப்படாது.

(2) விரைவாக வழக்குகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குறிக்கோளை எட்ட ஊழல் ஒழிப்பு ஆணையம் ஆண்டு இறுதியில் ஆய்வு செய்து வழக்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மேலும் சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க அரசுக்கு பரிந்துரை அளிக்கும்.

(3) சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி இந்தச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்ற பெஞ்சுகளை அமைப்பார். இது வழக்கை ஆறு மாத காலத்திற்குள் விசாரித்து தீர்ப்பளிக்க உதவும்.

**பிரிவு 34 - கட்டுப்பாடுகள் விதிக்க ஊழல் ஒழிப்பு ஆணையத்திற்குள்ள அதிகாரங்கள்**

ஊழல் ஒழிப்பு ஆணையம் எழுத்து மூலமாக அறிவிப்பு அளிப்பதன் மூலம் இந்தச் சட்டத்தில் சீரான கட்டுப்பாடுகளையும் , விதிகளையும் மாற்ற முடியும்.

## அத்தியாயம் 6 - ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் நிதி விவரங்கள்

**பிரிவு 35 - செலவுகள்**

ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் செலவுகள் அனைத்தும் மாநில அரசின் கூட்டுநிதியிலிருந்து பெறப்படும்.

**பிரிவு 36 - வரவு – செலவு விவரங்கள்**

ஊழல் ஒழிப்பு ஆணையம் வரவு செலவு திட்டத்தை தயாரித்து மாநில அரசிற்கு அனுப்பி வைக்கும். மாநில அரசு ஒப்புதல் அளித்த பின் செலவு விவரங்களை மாநில அரசின் விதிகளின் கீழ் சமர்ப்பிக்க வேண்டும்.

## அத்தியாயம் 7 – சொத்துக்கள் மற்றும் கடன்கள் தாக்கல்

**பிரிவு 37 – பொது ஊழியர்களின் சொத்து விபரங்கள் குறித்த பிரகடனம்**

(1) ஒவ்வொரு பொது ஊழியரும் இந்த சட்டத்தின் கீழ் அல்லது கீழ் விவரிக்கப்பட்ட முறையில் அவரது சொத்துகள் மற்றும் கடன்கள் விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும்.

(2) ஒரு பொது ஊழியர், தனது அலுவலகத்தில் சேரும் அல்லது உறுதிமொழி எடுக்கும் தேதியில் இருந்து 30 நாட்களுக்குள், சம்பந்தபட்ட அதிகாரியிடம் கீழ்கண்ட தகவல் விவரங்களை தர வேண்டும்.

(அ) அவரது, அவர் மனைவி, மற்றும் அவரை சார்புடைய மகன்கள், மகள்கள், கூட்டு அல்லது தனித்தனியாக, உரிமையாளர்கள் அல்லது பயனாளிகளாகிய; அனைத்து சொத்துக்களையும் தெரிவிக்க வேண்டும்

(ஆ) அவரது, மற்றும் அவரது மனைவி மற்றும் அவரது சார்புடைய மகன்கள், மகள்கள், அனைவரின் கடன்கள் குறித்த தகவல்களை தெரிவிக்க வேண்டும்.

3) பணியில் இருக்கும் ஒவ்வொரு பொது ஊழியரும் இந்த சட்டம் அமலில் வந்தவுடன் தங்களின் சொத்து மற்றும் கடன் விவரங்களை உட்பிரிவு (2) ல் குறிப்பிட்டுள்ளபடி, முப்பது நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

(4) ஒவ்வொரு பொது ஊழியரும், உட்பிரிவு (2) ல் குறிப்பிட்டுள்ளபடி மார்ச் 31 வரையிலான அந்தாண்டு சொத்துகள் மற்றும் கடன்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 31 க்குள் சமர்பிக்க வேண்டும்.

(5) உட்பிரிவு (2) (அல்லது) உட்பிரிவு (3), மற்றும் உட்பிரிவு (4) கீழ் உள்ள ஆண்டு வருவாய் ஆகிய தகவல்களை குறிபிட்ட வடிவம் மற்றும் குறிபிட்ட முறையில் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தாக்கல் செய்யவேண்டும்

(6) ஒவ்வொரு அமைச்சகம் அல்லது ஒவ்வொரு துறையின் சம்பந்தபட்ட அதிகாரிகள், அத்தகைய அறிக்கைகள் அனைத்தையும் அந்த ஆண்டின் ஆகஸ்ட் 31 தேதிக்குள் தங்களது இணையத்தளத்தில் வெளியிட வேண்டும்.

*விளக்கம்– இந்த பிரிவு நோக்கத்திற்கான, "சார்புடைய மகன்/மகள்கள்" என்பது தனியாக வருமானம் இல்லாமல் முழுவதுமாக அந்த பொதுஊழியரை சார்ந்து இருக்கும் மகன்கள் அல்லது மகள்கள் ஆகும்.

**பிரிவு 38 - சொத்துக்கள் அறிவிக்கப்படாத நிலை அல்லது தவறாக அறிவிக்கப்பட்ட நிலை**

ஒரு பொது ஊழியர் வேண்டுமென்றே அல்லது நியாயமான காரணம் இல்லாமல் கீழ்கண்டவற்றை தாக்கல் செய்ய தவறினால்–

(அ) தனது சொத்துக்களை தாக்கல் செய்தல்; அல்லது

(ஆ) அந்த சொத்துக்களை பற்றிய தவறான தகவல்களைத் தருவது, மற்றும் சொத்துக்களை வைத்திருப்பது தெரியப்படுத்தாமல் இருப்பது (அல்லது) தவறான

தகவல் அளிக்கப்பட்டது தெரிய வந்தால்,பின்னர், அத்தகைய சொத்துக்கள் நியாயமானது என நிரூபிக்கப்படாமல் இருப்பின், அவை அந்த அரசு அதிகாரியின் சொத்தாகவே கருதப்படும், மற்றும் ஊழல் மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றே கருதப்படும்.